

தரம் - 08





# தமிழ் மொழியும் இலக்கியமும்

கிரகித்தற் பயிற்சி

அலகு - 01

## நாட்டுப்புறக் கதைகள்

**MR.T.KOLINS** (dip.in.teach)
KM/KM/GANESHA M.V CHENAIKKUDIYIRUPPU

# நாட்டுப்புறக் கதைகள்

இச் சிறுகதையின் ஆசிரியர் **கு.அழகிரிசாமி** 20ஆம் நூற்றாண்டின் சிறந்த தமிழ் சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவராக விளங்குகிறார்.

## வியாபாரியின் கோபம்


- ✓ இக்கதை வியாபாரியின் கடுஞ்சிக்கனத்தை நகைச்சுவை உணர்வுடன் எடுத்துக் காட்டுகிறது.
  - ➢ சொத்தில் நூறில் ஒருமடங்கு வியாபாரத்தின் மூலமும் தொன்னூற்றொன்பது பங்கு சிக்கனத்தின் மூலமும் சம்பாதித்துக்கொண்டார்.
  - ➢ மிளகு மூட்டைக்குள் விட்ட கையை கழுவி ஒரே நாளில் ரசம் வைத்து முடித்துவிட்டதால் ஒரு நாளுக்கு ஒரு விரலைக் கழுவி ரசம் வைத்து சாப்பிட்டிருக்கலாம் அவன் எல்லாவற்றையும் வீணாக்கி விட்டதாக கோபமடைந்தார்



# இரண்டு தம்பிகள்

- மூத்தவன் கலியாண வீட்டுத் தம்பி இளையவன் இழவு வீட்டுத் தம்பி.

- இருவரும் தமது வழக்கத்தை மாற்றி அண்ணன் இழவு வீட்டிற்கும் தம்பி கல்யாண வீட்டிற்கும் புறப்பட்டு சென்று அங்கு அடி உதை வாங்கி வந்தனர்.



- தெரியாத காரியத்தில் தலையிட்டால் அபாயம். அவரவர்களுக்கு திறமையானவற்றில் ஈடுபட வேண்டுமென தந்தை அறிவுரை கூறினார்.

- **ஆகவே நாம் எப்போதும் போகும் இடம் பற்றி அறிந்து செல்லுதல் வேண்டும்**

1. **பின்வரும் சொற்களில் பொருள் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

    1. ஆழி, கடல், பொய்கை , சமுத்திரம்
    2. மதியம், அந்தி, மத்தியானம், நண்பகல்
    3. போர், சமர், எ.ஃ.கு, யுத்தம்
    4. அறிவு, மதி, ஞானம், ஞாலம்
    5. நூல், கருவி, பனுவல், புத்தகம்

## 02. தொடர்புபடுத்துக

| | | |
|---|---|---|
| 1. | உயிர் எழுத்துக்கள் | 01 |
| 2. | மெய் எழுத்துக்கள் | 247 |
| 3. | உயிர்மெய் எழுத்துக்கள் | 06 |
| 4. | ஆய்த எழுத்து | 216 |
| 5. | மெல்லின எழுத்துக்கள் | 12 |
| 6. | தமிழ் எழுத்துக்கள் | 18 |

**03. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க**

1. ஈகை : ...................................
2. அகம் : ...................................
3. ஆசை : ...................................
4. உலகம் : ...................................
5. எண்ணம் : ...................................
6. பாம்பு : ...................................
7. விருட்சம் : ...................................
8. ஔடதம் : ...................................
9. வெய்யோன் : ...................................
10. ஐயம் : ...................................

| |
|---|
| சந்தேகம் |
| விருப்பம் |
| கொடை |
| மருந்து |
| மரம் |
| அரவம் |
| ஞாலம் |
| சூரியன் |
| சிந்தனை |
| உள்ளம் |

**04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சக்தி களஞ்சியம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
2. வியாபாரி எவ்வாறு செல்வந்தரானார்?
3. தந்தை மகன் மீது சீற்றமடையக் காரணம் யாது?
4. மூத்தவனும் இளையவனும் எப்பெயர்களால் அழைக்கப்பட்டனர்?
5. உயிர் எழுத்துக்களின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு உதாரணம் தருக?
6. மெய் எழுத்துக்களை வகைப்படுத்திக் காட்டுக?
7. கிரந்த எழுத்துக்கள் எவை?

**05. பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்கு கூறப்பட்டன என எழுதுக**

1. "ஒரு முழுக்கையையும் கழுவிய தண்ணீரை இன்று ரசம் வைத்து சாப்பிட்டு விட்டோமே"

யாரால் :

யாருக்கு :

2. "என்ன ஐயா எல்லோரும் சிரித்துக் கும்மாளம் போடுகிறீர்கள்"

யாரால் :

யாருக்கு :

3. "தெரியாத காரியத்தில் தலையிட்டால் இந்த அபாயம் தானப்பா"

யாரால் :

யாருக்கு :

# விடைகள்

## 1. வேறுபட்ட சொல்

1. பொய்கை 2. அந்தி 3. எ.ஃ.கு 4. ஞாலம் 5. கருவி

## 02. தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| 1. உயிர் எழுத்துக்கள் | 01 |
| 2. மெய் எழுத்துக்கள் | 247 |
| 3. உயிர்மெய் எழுத்துக்கள் | 06 |
| 4. ஆய்த எழுத்து | 216 |
| 5. மெல்லின எழுத்துக்கள் | 12 |
| 6. தமிழ் எழுத்துக்கள் | 18 |

## 03. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. ஈகை | : | **கொடை** | 2. அகம் | : | **உள்ளம்** |
| 3. ஆசை | : | **விருப்பம்** | 4. உலகம் | : | **ஞாலம்** |
| 5. எண்ணம் | : | **சிந்தனை** | 6. பாம்பு | : | **அரவம்** |
| 7. விருட்சம் | : | **மரம்** | 8. ஔடதம் | : | **மருந்து** |
| 9. வெய்யோன் | : | **சூரியன்** | 10. ஐயம் | : | **சந்தேகம்** |

**04. சுருக்கமான விடை தருக**

1. **கு. அழகிரிசாமி**
2. **மிகுந்த சிக்கனத்தால் செல்வந்தரானார்**

3. **ஐந்து விரல்களையும் ஒரே நாளில் கழுவி ரசம் வைக்கக் கொடுத்து மிளகை வீணாக செலவு செய்துவிட்டான் என சீற்றமடைந்தார்.**

4. மூத்தவன் – **கல்யாண வீட்டுத் தம்பி**
   இளையவன் – **இழவு வீட்டுதம்பி**

5. உயிர்க்குறில் – **அ, இ, உ, எ, ஒ,**
   உயிர் நெடில் – **ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ**

6. வல்லினம் - **க், ச், ட், த், ப், ற்**
   மெல்லினம் - **ங், ஞ், ண், ந், ம், ன்**
   இடையினம் - **ய், ர், ல், வ், ள், ழ்**

7. **ஷ, ஜ, ஹ, ஸ, ஸ்ரீ**

**05.** 1. யாரால் : **தந்தையால்**
யாருக்கு : **மகனுக்கு**

2. யாரால் : **இளையவனால்**
யாருக்கு : **திருமண வீட்டில் உள்ளவர்களுக்கு**

3. யாரால் : **தந்தையால்**
யாருக்கு : **மகன்மாருக்கு**